2001 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பகல் இதை எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன் அவர்களே, எழுந்து இருக்கையில் உட்காருங்கள். (சிரிப்பு)

(இ) திருவாரூர், நாகை மாவட்டங்களில் குடிசைகள் தீப்பற்றி எரிதல்

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், நாகை மாவட்டங்களிலே கடந்த 15 தினங்களாக நூறுக்கும் மேற்பட்ட குடிசைகள் திடீர் திடீரென்று எரிந்துகொண்டிருக்கின்றன; மர்மமான முறையிலே எரிந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி அவர்களே, நீங்களும் உட்கார்ந்து விடாதீர்கள். (சிரிப்பு) எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வோம்.

திரு. ஜி. பழனிசாமி: ஒரு நிமிடம் ஐயா, தகவலைக் கேட்டு வாங்கி, நாளைக்கு பதில் சொல்லுங்கள். ஏனென்றால், நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அமைதி சீர்குலைந்த நிலையிலே அந்த மக்கள் இரவு பகல் பூராவும், தூக்கமில்லாமல் பலர் சோதனையில் இருக்கிறார்கள். அதனைக் கேட்டு, ஏதாவது ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் அல்லது அமைதியை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் எங்களையெல்லாம் தொலைபேசி மூலமாகவும், தந்தி மூலமாகவும் தொடர்பு கொண்டு, ஏன் சட்டமன்றத்திலே உட்கார்ந்திருக்கிறீர்கள், இதைக்கூட அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு போகாத ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக ஏன் இருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதற்கு உரிய நடவடிக்கையை காவல் துறை மூலமாக எடுத்து, பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே இது குறித்து அவையிலே

பேசியிருக்கிறார்கள். இது குறித்த அனைத்து விவரங்களையும் உடனடியாக அரசுக்குத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டு இருக்கிறார்கள். தகவல் வந்தவுடன் கட்டாயமாக அது குறித்த நிலை தெரிவிக்கப்படும்.

முற்பகல் 11-00

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த ஊரிலேயே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

(ஈ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை விரைந்து எடுத்துக்கொள்ளுதல்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புகளும் கடந்த ஒரு வார காலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுத்த நாளிலேயே எடுக்கப்படாவிட்டாலும்கூட, குறைந்தபட்சம் அடுத்த நாளிலாவது எடுத்துக்கொள்ள வேண்டும். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொன்றையும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக நாங்கள் கேட்கவில்லை. ஏனென்றால் தொகுதி மக்களுக்கு இங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே, குறைந்தபட்சம் அன்று இல்லாவிட்டாலும், அடுத்த நாளாவது தங்களுக்குக் கிடைத்த தகவல்களை, அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன்னாலே வைத்து, அந்த உறுப்பினரை, அந்தப் பிரச்சினையை எழுப்பவிட்டீர்களானால் போதுமானதாக இருக்கும். அமைச்சர் எப்போது தயாராகிறாரோ அப்போதுதான் எடுக்கப்படும் என்கிற முறை சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன்.

(ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து—தொடர்ச்சி

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி விபத்து சம்பந்தமாக 16 ஆம் தேதி நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு